بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 23/01/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறைநேசம் குறித்த ஈமானுக்கு ஒளியூட்டும் குறிப்புகள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்து எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. கடந்த குத்பாக்களில் அல்லாஹ்விடம் அன்னார் கொண்டிருந்த அன்பு குறித்து கூறப்பட்டது; இது தொடர்பாகவே இன்றும் சில கூடுதல் விஷயங்களைக் கூறுவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை வணக்க முறை குறித்தும் அதன் அழகு குறித்தும் கொஞ்சம் ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. இன்றும் அது குறித்து ஹதீஸ்களின் வாயிலாகவும், அதேபோல் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து மற்றும் அல்லாஹ்வின் மீதான நேசத்தை எத்தகைய உயர்ந்த முறையில் படம் பிடித்துக் காட்டியுள்ளார்கள் என்பது குறித்தும் சில மேற்கோள்களின் வாயிலாக எடுத்துக் கூறுவேன்.

ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஓர் இரவு நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து தொழுதேன். அன்னார் சூரா பகராவை ஓதத் தொடங்கினார்கள். நூறு வசனங்களுக்குப் பிறகு அன்னார் ருகூவிற்குச் செல்வார்கள் என்று நான் நினைத்தேன். ஆனால், அன்னார் அதைத் தாண்டிச் சென்றார்கள். அந்த முழு சூராவையும் முடித்ததும் ருகூவிற்குச் செல்வார்கள் என்று நினைத்தேன். ஆனால், அன்னார் அப்போதும் தொடர்ந்து ஓதினார்கள். பிறகு அன்னார் சூரா அன்னிஸாவைத் தொடங்கி ஓதினார்கள்; அதனைத் தொடர்ந்து சூரா ஆலி இம்ரானை தொடங்கி அதனையும் ஓதினார்கள். அன்னார் மிகவும் நிறுத்தி, நிதானமாகவும் ஓதிக்கொண்டிருந்தார்கள். இறைவனின் தூய்மையை எடுத்துரைக்கும் வசனம் வரும்போது அன்னார் தஸ்பீஹ் செய்தார்கள். ஏதேனும் வேண்டுதல் புரியும் வசனம் வரும்போது துஆ செய்தார்கள். மேலும் அல்லாஹ்வின் பாதுகாப்பு கோரும் வசனம் வரும்போது பாதுகாப்பு வேண்டினார்கள்.

பிறகு ருகூ செய்தபோது "சுப்ஹான ரப்பியல் அழீம்" மகத்துவமிக்க என் இறைவன் தூய்மையானவன் என்று ஓதினார்கள். அன்னாரின் ருகூவின் கால அளவானது கியாமிற்கு (தொழுகையில் நிற்கும் நேரத்திற்கு) இணையாக மிக நீண்டதாக இருந்தது. பிறகு "ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா" புகழ்வோரின் புகழை அல்லாஹ் செவியேற்கிறான் எனக் கூறி நீண்ட நேரம் நின்றார்கள். இது அன்னாரின் ருகூவின் கால அளவிற்கு நெருக்கமாக இருந்தது. பிறகு சஜ்தாவில் "சுப்ஹான ரப்பியல் அஃலா" மிக மேலானவனான என் இறைவன் தூய்மையானவன் என்று

ஓதினார்கள். அந்தச் சஜ்தாவும் கியாமிற்கு இணையாக நீண்டதாக இருந்தது. (நஸாயீ ஹதீஸ் எண் 1134)

அதேபோல் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'ஓர் இரவு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனின் ஒரே ஒரு வசனத்தை மட்டும் ஓதியவாறு 'கியாமில்' நின்றார்கள்.'

ஒருபுறம் ஸஹாபியின் அறிவிப்பில் பல நீண்ட சூராக்களை ஓதியதாக உள்ளது. ஆனால் இங்கு ஒரே ஒரு வசனத்தை ஓதியவாறு நீண்ட நேரம் கியாம் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறே ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறைவணக்கத்திற்காக நின்றார்கள். அதிகாலை வரை ஒரே ஒரு வசனத்தை மீண்டும் மீண்டும் ஓதிக் கொண்டிருந்தார்கள். அந்த வசனம், "நீர் அவர்களைத் தண்டித்தால் நிச்சயமாக அவர்கள் உனது அடியார்களே. நீர் அவர்களை மன்னித்தால் நிச்சயமாக நீயே மிகைத்தவனும் ஞானமிக்கவனுமாவாய்."

பிறகு, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மூலமாக மற்றுமோர் அறிவிப்பு வருகின்றது. அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் சூரிய கிரகணம் ஏற்பட்டது. ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழுகை நடத்தினார்கள். அன்னார் மிக நீண்ட கியாம், ருகூ மற்றும் சஜ்தாக்களுக்குப் பிறகு தொழுகையை முடித்தார்கள். அப்போது சூரியன் பிரகாசமாகி இருந்தது. பிறகு, அன்னார் மக்களுக்கு குத்பா கொடுத்தார்கள். அன்னார் அல்லாஹ்வின் புகழையும் அவனது மாண்பையும் எடுத்துரைத்தார்கள். பிறகு கூறினார்கள்: "சூரியனும் சந்திரனும் அல்லாஹ்வின் அடையாளங்களுள் உள்ளவை. இவை யாருடைய மரணத்திற்காகவோ அல்லது பிறப்பிற்காகவோ கிரகணம் அடைவதில்லை. எனவே, நீங்கள் இவற்றை காணும்போது அல்லாஹ்வின் பெருமையை எடுத்துரையுங்கள்; அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள்; தொழுகையில் ஈடுபடுங்கள்; ஸதகா கொடுங்கள்."

பிறகு கூறினார்கள்: "முஹம்மதின்(ஸல்) உம்மத்தே! தனது அடியார்களுள் ஆணோ பெண்ணோ யார் விபச்சாரத்தில் ஈடுபட்டாலும் அதைக் கண்டு அல்லாஹ்வை விட அதிக ரோஷம் கொள்பவர் எவருமில்லை." பின்னர் அன்னார் கூறினார்கள்: "முஹம்மதின்(ஸல்) உம்மத்தே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அறிந்தவற்றை நீங்கள் அறிவீர்களானால், நீங்கள் மிக அதிகமாக அழுவீர்கள்; குறைவாகவே சிரிப்பீர்கள்." பிறகு அன்னார், "கவனமாகக் கொள்ளுங்கள்! நான் (செய்தியை) எட்ட வைத்து விட்டேனா?" என்று கேட்டார்கள்.

இவ்வாறு அன்னார் அல்லாஹ்வின் பக்கம் திரும்புவதற்கும், அவனை வணங்குவதற்கும், அவன் பக்கம் குனிவதற்கும் கவனமூட்டினார்கள். மேலும், "இதில்தான் உங்கள் வாழ்வாதாரமும், உங்கள் வாழ்க்கையும் உள்ளது" என்று கூறினார்கள். "எனக்குத் தெரிந்திருப்பது போல் இந்த விஷயங்களின் ஆழத்தை நீங்கள் அறிந்தால், நீங்கள் சிரிப்பதைத் தவிர்த்து அதிகமாக அழுவீர்கள்; அல்லாஹ்விடம் துஆ செய்வீர்கள்" என்றும் கூறினார்கள். எனவே, நாமும் துஆக்களின் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ்வுடன் ஒரு தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதேபோல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்தவொரு பெரிய காரியத்தையும் செய்ததில்லை. அல்லாஹ்வின் கட்டளை வரும்போதே அதனைச் செய்தார்கள். மக்கா வாசிகள் கடுமையாகத்

துன்புறுத்திய போதிலும், இறைவனிடமிருந்து வஹீ இறக்கப்பட்டு மக்காவை விட்டு வெளியேறக் கட்டளை வரும் வரை அன்னார் மக்காவை விட்டு வெளியேறவில்லை என்பதையும் நாம் காண்கிறோம். மக்கா வாசிகளின் கொடுமைகள் அதிகரித்ததைக் கண்டு அபிசீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்ய ஸஹாபிகளுக்கு அன்னார் அனுமதியளித்தபோது, அன்னாரும் அவர்களுடன் வர வேண்டும் என்று ஸஹாபிகள் கோரிக்கை வைத்தனர். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "எனக்கு இன்னும் இறைவனிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை" என்று கூறினார்கள்.

**இறைநேசம் தொடர்பாக, அன்னார் தாயிஃப் பயணத்தின் போது காயமுற்ற சம்பவம் வரலாற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.** நுபுவ்வத்தின் 10 ஆம் ஆண்டு அபூதாலிப் அவர்களின் மறைவிற்குப் பிறகு குரைஷிகள் ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களை மீண்டும் துன்புறுத்தத் தொடங்கியபோது அன்னார் தாயிஃப் சென்றார்கள். அங்கு பத்து நாட்கள் தங்கியிருந்து இஸ்லாமிய அழைப்பு விடுத்த போதிலும் எவரும் அதனை ஏற்கவில்லை. ஸஹீஹ் புகாரியில் இச்சம்பவம் குறித்து ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், "தங்களுக்கு உஹுதுப் போரை விடக் கடினமான நாள் ஏதேனும் உண்டா?" என்று வினவினார்கள். அதற்கு அன்னார் கூறினார்கள்: "அகபா நாளில் அதாவது, தாயிஃபில் இப்னு அப்தி யாலீல் பின் அப்தி குலால் என்பவனிடம் நான் இஸ்லாமியச் செய்தியைக் கொண்டு சென்ற அந்த நாள் மிகக் கடினமானதாக இருந்தது. நான் விரும்பிய பதிலை அவன் அளிக்கவில்லை. கவலையுடனும் சிந்தனையுடனும் அங்கிருந்து நான் திரும்பி வந்து கொண்டிருந்தேன். 'கர்னுஸ் ஸஆலிப்' என்ற இடத்தை அடைந்தபோதுதான் எனது கவலை நீங்கியது. நான் தலையை உயர்த்தி பார்த்தபோது ஒரு மேகம் எனக்கு நிழல் தந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அதில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் இருந்தார்கள். அவர்கள் என்னை அழைத்து, 'அல்லாஹ் தங்கள் விஷயத்தில் தங்களுடைய மக்களின் பேச்சைச் செவியுற்றான்; தங்களுக்கு உதவும் பொருட்டு மலைகளுக்கான வானவரை அனுப்பியுள்ளான். தாங்கள் விரும்பிய கட்டளையை அவருக்கு இடலாம்' என்று கூறினார்கள்."

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேலும் கூறுகையில், "பிறகு மலைகளுக்கான வானவர் என்னை அழைத்து ஸலாம் கூறினார். பிறகு, முஹம்மது (ஸல்) அவர்களே! தாங்கள் இவ்விஷயத்தில் விரும்பிய கட்டளையை இடுங்கள். தாங்கள் விரும்பினால் இந்த இரு மலைகளையும் அவர்கள் மீது மோதச் செய்து விடுகிறேன் என்று கூறினார்." அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "வேண்டாம்! இவர்களின் சந்ததியிலிருந்து அல்லாஹ்வை வணங்கக்கூடிய, அவனுக்கு எதனையும் இணை வைக்காத மக்களை அல்லாஹ் உருவாகக்கூடும் என நான் நம்புகிறேன்" என்று கூறினார்கள்.

இவ்வாறு அன்னாரின் இரக்க குணம் இங்கும் மேலோங்கியது. அன்னார் அந்த மக்களைக் காப்பாற்றினார்கள். அதன் பிறகு மக்கா வெற்றிக்கு கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவர்களின் சந்ததியினர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து மற்றும் கண்ணியம் குறித்து எடுத்துரைக்கும்போது இவ்வாறு கூறுகிறார்கள்:** "மனிதனுக்கு அருளப்பெற்ற - அதாவது முழுமையான மனிதனுக்கு அருளப்பெற்ற உயர்தகுதியுடைய அந்த ஒளி வானவர்களிலும் இருக்கவில்லை, விண்மீன்களிலும் இருக்கவில்லை, சந்திரனிலும் இருக்கவில்லை, சூரியனிலும்

இருக்கவில்லை. மேலும் அது பூமியிலுள்ள கடல்களிலும் ஆறுகளிலும் இருக்கவில்லை. அது மாணிக்கம், நீலமணி, மரகதம், வைரம், முத்து ஆகியவற்றிலும் இருக்கவில்லை. சுருக்கமாக, அது பூமி, வானம் ஆகியவற்றின் எப்பொருளிலும் இருக்கவில்லை. அது மனிதனிடமே இருந்தது. அதாவது முழுமையான மனிதனிடம். அதன் முழுமை, நிறைவு, உயர்வு, மேன்மை எல்லாம் ஒருங்கே கொண்டவர் நம் தலைவரும் எஜமானரும், நபிமார்களின் தலைவரும், உயிரினங்களில் எஜமானருமாகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள். எனவே அந்த ஒளி அவர்களுக்கு வழங்கப்பட்டது. பின்னர் அவர்களின் பண்புகளை சிறிதேனும் கொண்டவர்களுக்கும் அவர்களின் தகுதிக்கேற்ப கொடுக்கப்பட்டது."

*இது தொடர்பாக ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இன்னும் சில ஞானமிக்க மேற்கோள்களை எடுத்து வைத்த பிறகு ஹுஸூர் அவர்கள் கூறியதாவது:* ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து, தகுதி குறித்த இத்தகைய மிக உயர்ந்த புரிதலை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கினான்; அதனை அன்னார் நமக்கும் எடுத்துக் கூறியுள்ளார்கள். அவ்வாறிருந்தும் நமது எதிரிகள் நம்மைப் பார்த்து - நவூதுபில்லாஹ்! - நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவமதிப்பதாகவும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு அதிக அந்தஸ்து வழங்குவதாகவும் குற்றம் சாட்டுகின்றனர். அல்லாஹ் இவர்களின் தீமையிலிருந்து ஒவ்வோர் அஹ்மதியையும் பாதுகாப்பானாக.

*இருண்ட இரவுகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த ஏற்றுக் கொள்ளப்பட்ட துஆக்களின் தாக்கத்தை ஹுஸூர் அவர்கள் எடுத்துரைக்கும் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மேற்கோளை எடுத்துரைத்தார்கள்.*

"எனது தனிப்பட்ட அனுபவத்தின் மூலம் நான் காண்பது என்னவென்றால், துஆவின் தாக்கமானது நீர் மற்றும் நெருப்பின் தாக்கத்தை விட மேலானது. சொல்லப்போனால், இயற்கை காரணிகளின் வரிசையில் துஆவைப் போன்று மகத்தான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது வேறு எதுவுமில்லை" என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அல்லாஹ் நமக்கு இந்தப் பாதையில் சென்றவாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட துஆக்களைச் செய்வதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக. உண்மையான முறையில் துஆக்களைச் செய்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. துஆக்களின் உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி நடக்க முயற்சிப்பவர்களாகவும் இருக்கும் வகையில் உண்மையான முஃமின்களாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)